1987 மார்ச் 24]

மானாமதுரை—கிருஷ்ணராஜபுரத்தில் அரிசனங்களுக்கு செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைத்தல்.

152—(* வினா எண் 10189) திரு. க. பாரமலை: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை—கிருஷ்ணராஜபுரத்தில் வசிக்கும் அரிசனங்களுக்காக கதர்த் துறை மூலம் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த சங்கம் எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, கேள்விக்கு இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு விசயலட்சுமி அவர்கள் அமைச்சராக இருந்தபோது அவர்களிடம் நானே இந்த விண்ணப்பத்தை கொடுத்திருக்கிறேன். பலதடவை அது சம்பந்தமாக பரமக்குடி உதவி இயக்குநர் விசாரித்து அரசுக்கு அறிக்கை அனுப்பி இருப்பதாக எனக்கு தகவல் அனுப்பினார். மானாமதுரை மட்பாண்டம், ஓட்டு தொழில்களில் மிகச் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. அங்கிருக்கின்ற மண், இந்தத் தொழிலுக்கு ஏற்ற மண் என்பதையும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரையில் ஏற்கனவே ஒரு செங்கல் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. அந்த எல்லைக்குள்தான் கிருஷ்ணராஜபுரம் சேர்கிறது. அப்படி ஒரே எல்லைக்குள் கூட்டுறவுச் சங்க சட்டத்தின்படி இன்னொரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிப்பதற்கு இடம் இல்லை. ஆகவே அந்த ஆதிதிராவிட மக்கள் இந்தச் சங்கத்திலேயே உறுப்பினர்களாக சேர்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, ஒரே எல்லைக்குள் இரண்டு சங்கங்கள் இருக்கலாம். அதற்கு பைலாவை திருத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு—அவ்வாறு பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்த வகையில் பைலாவை அமெண்ட் செய்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு—அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இது ஒரே பஞ்சாயத்துக்குள்ளே வருகிறது. பஞ்சாயத்து என்பதே மிகக் குறுகிய ஒரு வட்டம்தான். அந்த வட்டத்திற்குள் இன்னொரு கூட்டுறவுச் சங்கம் துவங்குவது என்பது வியாபாரத்திற்கும் அவ்வளவு ஏற்றதாக இருக்காது என்பது என் கருத்து.

சத்துணவு மையம்.

153—(*வினா எண் 10635) **திரு. த. மாரிமுத்து:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சத்துணவு மையத்திலாவது ஆதி திராவிடர் குழந்தைகளை தனித்து பிரித்து வைத்து உணவு வழங்கப்படுகிறதாக ஏதேனும் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சத்துணவு மையத்திலும் இதுபோன்ற பிரச்சனை எழவில்லை.

உடல் ஊனமுற்றோருக்கு சத்துணவுக் கூடங்களில் பணிபுரிய முன்னுரிமை வழங்கல்.

154—(*வினா எண் 12195) **திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்களில் பணிபுரிவதற்கு உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற விதவைப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.